AR
780



# கலைஞரின் காலச்சுவடுகள்

# கலைஞரின் காலச் சுவடுகள்

மாண்புமிகு தமிழக முதல்வர்
தலைவர் கலைஞர் அவர்களின்
83 ஆம் பிறந்த நாள் வெளியீடு

**

தொகுப்பு

**தஞ்சை. இரா. இரத்தினகிரி, பொள்ளாச்சி மா. உமாபதி**
துணை அமைப்பாளர்கள், கலைஞர் கருவூலம்

வெளியீடு

**தலைமைக்கழகம்**
**திராவிட முன்னேற்றக்கழகம்**
அண்ணா அறிவாலயம், சென்னை - 6 00 018
பேசி : 044-24320270

**

முதல் பதிப்பு : ஜீன் 2006

விலை : ரூ. 10/-

அச்சிட்டோர்

ரத்னா ஆப்செட் பிரிண்டர்ஸ்
இராயப்பேட்டை
சென்னை - 14.



பொன்விழாக் கண்ட இயக்கத்தின்
முத்துவிழாக் கண்ட நாயகர்

## மாண்புமிகு தமிழக முதல்வர்
# தலைவர் கலைஞர் அவர்களின்
## வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள்

*எண்ணிய எண்ணியாங்கு எய்துப : எண்ணியார்*
*திண்ணியர் ஆகப் பெறின்.* – குறள் 666

என்ற வள்ளுவரின் வரிகளை வடிவமாகப் பார்க்க வேண்டுமென்றால், அதுதான் தலைவர் கலைஞர். திருக்குவளையில் பிறந்து, திருவாரூரில் வளர்ந்து, திராவிட இயக்கத்தில் இணைந்து, அதன் தலைவராகி, தமிழக முதல்வர் என மலர்ந்து, இந்தியத் துணைக் கண்டத்தின் அரசியல் வழிகாட்டியாக உயர்ந்து, இன்று உலகத் தமிழர்களின் ஒப்புயர்வற்ற உன்னதத் தலைவராக தரணி போற்ற வாழும் நம் தலைவரின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்தை பெருங்கடல் பரப்பிலிருந்து சிறு குழந்தையென்று தன் "கையில் அள்ளிய கடலாக" இவ்வெளியீட்டை படைக்கிறோம்.

– என்னாமே வாழ்வு.

முதல் பதிப்பு : ஜூன் 2006

விலை : ரூ. 10/-

அச்சிட்டோர்

ரத்னா ஆப்செட் பிரிண்டர்ஸ்
இராயப்பேட்டை
சென்னை - 14.



பொன்விழாக் கண்ட இயக்கத்தின்
முத்துவிழாக் கண்ட நாயகர்

# மாண்புமிகு தமிழக முதல்வர்
# தலைவர் கலைஞர் அவர்களின்
## வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள்

*எண்ணிய எண்ணியாங்கு எய்துப ; எண்ணியார்*
*திண்ணியர் ஆகப் பெறின். – குறள் 666*

என்ற வள்ளுவரின் வரிகளை வடிவமாகப் பார்க்க வேண்டுமென்றால், அதுதான் தலைவர் கலைஞர். திருக்குவளையில் பிறந்து, திருவாரூரில் வளர்ந்து, திராவிட இயக்கத்தில் இணைந்து, அதன் தலைவராகி, தமிழக முதல்வர் என மலர்ந்து, இந்தியத் துணைக் கண்டத்தின் அரசியல் வழிகாட்டியாக உயர்ந்து, இன்று உலகத் தமிழர்களின் ஒப்புயர்வற்ற உன்னதத் தலைவராக தரணி போற்ற வாழும் நம் தலைவரின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்தை பெருங்கடல் பரப்பிலிருந்து சிறு குழந்தையென்று தன் ''கையில் அள்ளிய கடலாக'' இவ்வெளியீட்டை படைக்கிறோம்.

**– எண்ணமே வாழ்வு.**

# நுழைவாயில்

''மனிதன் எவனும் தானாகவே பிறக்கவில்லை, ஆகவே அவன் தனக்காகவும் பிறக்கவில்லை. மனித வாழ்வு என்பது மக்கள் சமுதாயத்திற்குத் தொண்டு செய்வது; தொண்டு செய்யாத மனித வாழ்வு மிருக வாழ்வுக்குச் சமமானதே ஆகும்'' என்றார் தந்தை பெரியார்.

பெரியாரின் கொள்கைகளை ஏற்றுக்கொண்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் ''ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அடிமைப்பட்டு உதிர்ந்து கிடந்த தமிழ் மக்களை ஒன்றாக்கி, அவர்களுடைய உள்ளங்களுக்கு உரமூட்டி அவற்றுள் உறைந்திருந்த அச்சத்தை அகற்றி, தெளிவைப் புகுத்தி, தங்களைச் சூழ்ந்திருப்போர் வாழ்வுக்காகச் சொந்த வாழ்வை அர்ப்பணிப்போர்களாகத் தம்பிகளைத் தயாரித்து'' ''மாபெரும் அரசியல் சமுதாய இயக்கமாக **திராவிட முன்னேற்றக் கழகத்தை** உருவாக்கி வளர்த்தெடுத்து தலைவர் கலைஞர் கரங்களில் கழகத்தை ஒப்படைத்துச் சென்றார்கள்.

''தலைவன் என்பவன் நடத்துபவனாக இருக்க வேண்டுமே தவிர அவன் நடத்தப்படுபவனாக இருக்கக் கூடாது.'' என்று பெரியார் சொன்னது போலவே தலைவர் கலைஞர் திராவிட இயக்கத்தையும் சமுதாயத்தையும், நாட்டையும் வழி நடத்தும் தலைவராகத் தம்மை வடிவமைத்துக் கொண்டார்.

''தன்னை வெல்வான் தரணியை வெல்வான்'' என்ற நன்மொழிக்கு நம் தலைவரின் வாழ்வே நிகழ்காலச் சான்று.



முதலில் தன் ஆசைகளை தன் அறிவால் சீரமைத்து தன்னை ஒரு கொள்கை வழியில் நெறிப்படுத்திக் கொண்டு, தொண்டராகி, தான் சார்ந்த இயக்கத் தலைவராகி, தான் வாழும் தமிழ்நாட்டுத் தலைவராகி, இந்திய அரசியலை வழிகாட்டும் தலைவராக வாழ்ந்து வரும் தன்னானத் தலைவர் கலைஞர் வாழ்வு ஒரு பெருங்கடல்.

அவர் வாழ்வின் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நொடியும் சமுதாயப் பயன் செய்து கொண்டிருக்கிறது.

ஒரு மனிதனின் உடலில் தலையில் ஓடுகிற குருதியும் காலில் ஓடுகிற ரத்தமும் எப்படி ஒரே மாதிரி இருக்கிறதோ அதுபோலவே இயக்கத்தில் தலைவரிடம் உள்ள உணர்வு தொண்டர்கள் ஒவ்வொருவருக்கும் இருந்தாக வேண்டும். அவர் சமுதாயத்துக்காக பாடுபடும் பாங்கினை ஒவ்வொரு கழகத்தோழரும் பெற்றுக்கொண்டு அதை வளர்த்து சமுதாயப் பயன் செய்ய வேண்டும்.

''ஓய்வு என்பது சோம்பேறியின் சொல்'' என்பார் தலைவர் கலைஞர் ஓய்வு அறியாத அந்தத் தலைவரின் நெஞ்சு உள்ளத்தின் உழைக்கும் உணர்ச்சியைத் தொண்டர்கள் ஒவ்வொருவரும் பெற்று சலிப்பில்லாது சமுதாயத்திற்கு உழைத்தல் வேண்டும்.

''**வீழ்வது நாமாக இருந்தாலும் வாழ்வது தமிழாக இருக்க வேண்டும்**'' என்பதை வாழ்வின் ஒவ்வொரு நாளும் எண்ணிச் செயலாற்றிட ஒவ்வொருவரும் உறுதி கொள்வோம்.

- வெளியீட்டுக் குழு

முதலில் தன் ஆசைகளை தன் அறிவால் சீரமைத்து தன்னை ஒரு கொள்கை வழியில் நெறிப்படுத்திக் கொண்டு, தொண்டராகி, தான் சார்ந்த இயக்கத் தலைவராகி, தான் வாழும் தமிழ்நாட்டுத் தலைவராகி, இந்திய அரசியலை வழிகாட்டும் தலைவராக வாழ்ந்து வரும் தன்மானத் தலைவர் கலைஞர் வாழ்வு ஒரு பெருங்கடல்.

அவர் வாழ்வின் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நொடியும் சமுதாயப் பயன் செய்து கொண்டிருக்கிறது.

ஒரு மனிதனின் உடலில் தலையில் ஓடுகிற குருதியும் காலில் ஓடுகிற ரத்தமும் எப்படி ஒரே மாதிரி இருக்கிறதோ அதுபோலவே இயக்கத்தில் தலைவரிடம் உள்ள உணர்வு தொண்டர்கள் ஒவ்வொருவருக்கும் இருந்தாக வேண்டும். அவர் சமுதாயத்துக்காக பாடுபடும் பாங்கினை ஒவ்வொரு கழகத்தோழரும் பெற்றுக்கொண்டு அதை வளர்த்து சமுதாயப் பயன் செய்ய வேண்டும்.

''ஓய்வு என்பது சோம்பேறியின் சொல்'' என்பார் தலைவர் கலைஞர் ஓய்வு அறியாத அந்தத் தலைவரின் தொண்டு உள்ளத்தின் உழைக்கும் உணர்ச்சியைத் தொண்டர்கள் ஒவ்வொருவரும் பெற்று சலிப்பில்லாது சமுதாயத்திற்கு உழைத்தல் வேண்டும்.

**''வீழ்வது நாமாக இருந்தாலும் வாழ்வது தமிழாக இருக்க வேண்டும்''** என்பதை வாழ்வின் ஒவ்வொரு நாளும் எண்ணிச் செயலாற்றிட ஒவ்வொருவரும் உறுதி கொள்வோம்.

– வெளியீட்டுக் குழு

# பேராசிரியர் பெருந்தகை வாழ்த்து

## வாழிய பல்லாண்டு..... !

தந்தை பெரியாரின் அருமந்த மகவாகி வளர்ந்து
சிந்தைமிகு அண்ணாவின் இதயங்கொள் இளவலாகி
தடம்மாறாக் கொள்கையினால் தமிழினக் காவலனாகி
சிந்தையணு ஒவ்வொன்றும் செந்தமிழ்ப் புலவனாகி
தொண்டினில் தணலிடு தங்கமாய்த் தேய்வில் சந்தனமாய்
இனமானம் காத்திடும் திறங்கொண்ட கலைஞர் வாழி!

-கழகப் பொதுச்செயலாளர்



என் பாதை

சுயமரியாதைப் பாதை!

தமிழின நலம் காக்கும் பாதை!

பெரியார் பாதை!

அண்ணாவின் பாதை!

அறவழிப் பாதை !

அமைதிப் பாதை!

பல்முனைகளில் என்னைப் பயமுறுத்தினாலும்

அந்தப் பாதையிலிருந்து மாறமாட்டேன்.

-தலைவர் கலைஞர்

**என் பாதை**

***சுயமரியாதைப் பாதை!***

***தமிழின நலம் காக்கும் பாதை!***

***பெரியார் பாதை!***

***அண்ணாவின் பாதை!***

***அறவழிப் பாதை !***

***அமைதிப் பாதை!***

***பலமுனைகளில் என்னைப் பயமுறுத்தினாலும்***

***அந்தப் பாதையிலிருந்து மாறமாட்டேன்.***

**-தலைவர் கலைஞர்**

## “என் கடன் பணி செய்து கிடப்பதே”!

என் பொதுவாழ்வுப் பயணத்தில் இடர், துயர், இன்பம், துன்பம், எதிர்ப்பு, ஆதரவு, ஏச்சு, பேச்சு, இழிவு, பழி என எத்தனையோ விதவிதமான நிகழ்வுகளை எதிர்கொள்ளும்போது என்னை ஆளாக்கிய பெரியாரையும், அரவணைத்து வழி நடத்திய அண்ணாவையும் நினைத்துக்கொண்டு இலட்சியத்தில் இம்மியளவும் சறுக்கல் இல்லாமல் எச்சரிக்கையுடன் நடந்து கொண்டிருக்கிறேன்...

கழக உடன் பிறப்புகளையும் – அன்பெனும் அமுதூட்டி ஆதரவுக் கரம் நீட்டித் துணை நிற்கும் கோடிக்கணக்கான தமிழ்ப்பெருமக்களையும், அரசியலுக்கும், கட்சிப் பிரச்சினைகளுக்கும் அப்பாற்பட்டு வாழ்த்தி வருகின்ற அனைத்து நெஞ்சங்களையும், தூய துணைகளாகக் கொண்டு- இந்தத் துணைகள் என்றும் இருக்கும் என்ற நம்பிக்கையுடன் – இருக்க வேண்டுமென்ற வேண்டுகோளுடன் எஞ்சியுள்ள பயணத்தைத் தொடருகிறேன். **“என் கடன் பணி செய்து கிடப்பதே!”**

**– தலைவர் கலைஞர்**



கடமை கண்ணியம் கட்டுப்பாடு

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு

### ஐம்பெரும் முழக்கங்கள்

- அண்ணா வழியில் அயராதுழைப்போம்
- ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்
- இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்
- வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்
- மாநில சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி

## கடமை கண்ணியம் கட்டுப்பாடு

**எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்**
**மங்காத தமிழென்று சங்கே முழங்கு**

### ஐம்பெரும் முழக்கங்கள்

- அண்ணா வழியில் அயராதுழைப்போம்
- ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்
- இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்
- வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்
- மாநில சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி

## “என் செய்தி ....

அனைத்துப் பிரிவு மக்களும் நலன்

அனுபவித்திட வேண்டும், அதற்கான முயற்சிகளில்

இளைஞர்கள் வாலிபர்கள், முதியோர்கள் அனைவரும்

ஈடுபட வேண்டும்.

சமத்துவ சமதர்ம வாழ்வு என்ற குறிக்கோளை எய்திட

இலட்சியப் பயணம் மேற்கொள்ள வேண்டும்

என்பதே என்னுடைய பிறந்தநாளில் தமிழக மக்கள் உள்ளிட்ட அனைத்துப் பகுதி மக்களுக்கும் விடுக்கும் வேண்டுகோள்.

– தலைவர் கலைஞர்



## தலைவர் கலைஞரின் சிறப்பியல்புகள் !

இணையற்ற மனிதாபிமானி, ஓய்விலா உழைப்பாளர், மக்கள் தலைவர், ஒப்பற்ற தொலைநோக்குச் சிந்தனையாளர், நிகரற்ற பேச்சாளர், சிறந்த எழுத்தாளர், நடிகர், திரைப்படத் தயாரிப்பாளர், பத்திரிகையாளர், ஓவியர், பதிப்பாளர், வெளியீட்டாளர், மதிநுட்பம் மிக்க அரசியல் அறிஞர், பொருளியல் அறிஞர், ஈடற்ற செயல் வீரர் தலைசிறந்த நிருவாகி.

அரசியல் ரீதியாக எதிரணியில் இருந்தாலும் மூதறிஞர் ராஜாஜி, பெருந்தலைவர் காமராசர், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர், பெரியவர் பக்தவத்சலம் ஆகியோரின் தொண்டுகளை மதித்து அவர்களுக்கு நினைவிடங்களையும், தியாகிகளின் மணிமண்டபங்களையும் கலையழகுடன் நிறுவிய சிறந்த மக்கள் நாயகர்.

தமது 14-ஆவது வயதில் பொது வாழ்வில் நுழைந்தார். "தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம்" என்ற திராவிட இயக்கத்தின் முதல் மாணவர் பிரிவை நிறுவியவர்; 1949-இல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிறுவன உறுப்பினர்களுள் ஒருவரானவர்.

ஈடு இணையற்ற ஜனநாயக அரசியல், சமுதாய இயக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருளாளராகப் பணியாற்றி, பின்பு அதன் தலைவராகித் தொண்டாற்றி வருகிறார்.

## தலைவர் கலைஞரின் சிறப்பியல்புகள் !

இணையற்ற மனிதாபிமானி, ஓய்விலா உழைப்பாளர், மக்கள் தலைவர், ஒப்பற்ற தொலைநோக்குச் சிந்தனையாளர், நிகரற்ற பேச்சாளர், சிறந்த எழுத்தாளர், நடிகர், திரைப்படத் தயாரிப்பாளர், பத்திரிகையாளர், ஓவியர், பதிப்பாளர், வெளியீட்டாளர், மதிநுட்பம் மிக்க அரசியல் அறிஞர், பொருளியல் அறிஞர், ஈடற்ற செயல் வீரர் தலைசிறந்த நிருவாகி.

அரசியல் ரீதியாக எதிரணியில் இருந்தாலும் மூதறிஞர் ராஜாஜி, பெருந்தலைவர் காமராசர், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர், பெரியவர் பக்தவத்சலம் ஆகியோரின் தொண்டுகளை மதித்து அவர்களுக்கு நினைவிடங்களையும், தியாகிகளின் மணிமண்டபங்களையும் கலையழகுடன் நிறுவிய சிறந்த மக்கள் நாயகர்.

தமது 14-ஆவது வயதில் பொது வாழ்வில் நுழைந்தார். ''தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம்'' என்ற திராவிட இயக்கத்தின் முதல் மாணவர் பிரிவை நிறுவியவர்; 1949-இல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிறுவன உறுப்பினர்களுள் ஒருவரானவர்.

ஈடு இணையற்ற ஜனநாயக அரசியல், சமுதாய இயக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருளாளராகப் பணியாற்றி, பின்பு அதன் தலைவராகித் தொண்டாற்றி வருகிறார்.

## கலைஞர் வரலாற்றில்...

| | |
|---|---|
| தமிழக சட்டமன்ற உறுப்பினர் | - 1957 - 1962 |
| தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் | - 1962 - 1967 |
| பொதுப்பணித்துறை அமைச்சர் தமிழ்நாடு அரசு | - 1967 - 1969 |
| தமிழக முதலமைச்சர் | - 1969 - 1971 |
| இரண்டாவது முறையாகத் தமிழக முதலமைச்சர் | - 1971 - 1976 |
| தமிழக சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் | - 1977 - 1983 |
| தமிழக சட்ட மேலவை உறுப்பினர், எதிர்க்கட்சித் தலைவர் | - 1984 - 1986 |
| மூன்றாம் முறையாகத் தமிழக முதலமைச்சர் | - 1989 - 1991 |
| நான்காம் முறையாகத் தமிழக முதலமைச்சர் | - 1996 - 2001 |
| ஐந்தாம் முறையாகத் தமிழக முதலமைச்சர் | - 2006.... |

## நின்றார் ! வென்றார்!

தமிழ்நாடு சட்டப் பேரவைக்குக் கீழ்க்காணும் தொகுதிகளில் போட்டியிட்டுத் தலைவர் கலைஞர் பெருவெற்றி பெற்றார்.

| | | |
|---|---|---|
| குளித்தலை | : | 1957 - 62 |
| தஞ்சாவூர் | : | 1962 - 67 |
| சைதாப்பேட்டை | : | 1967 - 71 |
| அண்ணா நகர் | : | 1971 - 76 |
| அண்ணா நகர் | : | 1977 - 80 |
| அண்ணா நகர் | : | 1980 - 83 |
| சட்ட மேலவை உறுப்பினர் | : | 1984 - 1986 |
| துறைமுகம் | : | 1989 - 91 |
| துறைமுகம் | : | 1991 |
| சேப்பாக்கம் | : | 1996 - 2001 |
| சேப்பாக்கம் | : | 2001 - 2006 |
| சேப்பாக்கம் | : | 2006லிருந்து |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் - மேலவையில் 50 ஆண்டுகளாகப் பதவி வகிப்பவர். 1957-லிருந்து 2006 வரை போட்டியிட்ட சட்டமன்றத் தேர்தல்கள் அனைத்திலும் வெற்றிச் சரித்திரம் படைத்தவர், படைத்துக் கொண்டு வருபவர்.



## கலைஞர் கண்ட களங்கள் !

1938 - பள்ளிப் பருவத்திலேயே மாணவர்களைத் திரட்டி இந்தி எதிர்ப்பு ஊர்வலம் நடத்தினார்.

1948 - ஆகஸ்ட் 15 இல் - தம் திருமண நிகழ்வு நாளில் கூட இந்தி எதிர்ப்பு ஊர்வலத்தில் பங்கேற்றுப் போராட்ட முழக்கமிட்டார்.

திருவையாறு அருகில் பள்ளியகரம் கறுப்புக்கொடி போராட்டம்.

1950 - திருச்சியில் இந்தி எழுத்து அழிப்புப் போராட்டம்.

1951 - ஜனவரி 7 - திராவிட நாடு கோரிக்கைக் கூட்டத்துக்கு 144 தடையைக் கண்டித்துக் கோவையில் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம். இராஜாஜி அவர்களுக்கு அவர் சென்றவிடம் எல்லாம் கறுப்புக் கொடி போராட்டம்.

1953 - டால்மியா என்னும் வடநாட்டு முதலாளியின் பெயரை கல்லக்குடி என்னும் பழந்தமிழ் ஊருக்கு வைத்ததைக் கண்டித்து ஜூலை 15 தலைவர் கலைஞர் தலைமையேற்ற கல்லக்குடி அறப்போர் 4 மாதச் சிறைத் தண்டனை. (15.07.53 முதல் 21.11.53 வரை).

1957 - நங்கவரம் விவசாயிகள் போராட்டத்தில் பங்கேற்பு.

1958 - தமிழ்நாட்டு உரிமைப் போராட்டங்களை இழிவாகப் பேசிய பிரதமர் நேருவுக்குக் கறுப்புக் கொடி. விலைக்கட்டம் தடை மீறல் (03.01.58 முதல் 08.01.58 வரை சிறைவாசம்).

## கலைஞர் வரலாற்றில்...

| | |
|---|---|
| தமிழக சட்டமன்ற உறுப்பினர் | - 1957 - 1962 |
| தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் | - 1962 - 1967 |
| பொதுப்பணித்துறை அமைச்சர் தமிழ்நாடு அரசு | - 1967 - 1969 |
| தமிழக முதலமைச்சர் | - 1969 - 1971 |
| இரண்டாவது முறையாகத் தமிழக முதலமைச்சர் | - 1971 - 1976 |
| தமிழக சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் | - 1977 - 1983 |
| தமிழக சட்ட மேலவை உறுப்பினர், எதிர்க்கட்சித் தலைவர் | - 1984 - 1986 |
| மூன்றாம் முறையாகத் தமிழக முதலமைச்சர் | - 1989 - 1991 |
| நான்காம் முறையாகத் தமிழக முதலமைச்சர் | - 1996 - 2001 |
| ஐந்தாம் முறையாகத் தமிழக முதலமைச்சர் | - 2006... |

## நின்றார் ! வென்றார்

தமிழகச் சட்டப் பேரவைக்குக் கீழ்க்காணும் தொகுதிகளில் போட்டியிட்டு தலைவர் கலைஞர் பெருவெற்றி பெற்றார்.

| | | |
|---|---|---|
| குளித்தலை | : | 1957 - 62 |
| தஞ்சாவூர் | : | 1962 - 67 |
| சைதாப்பேட்டை | : | 1967 - 71 |
| அண்ணா நகர் | : | 1971 - 76 |
| அண்ணா நகர் | : | 1977 - 80 |
| அண்ணா நகர் | : | 1980 - 83 |
| சட்ட மேலவை உறுப்பினர் | : | 1984 - 1986 |
| துறைமுகம் | : | 1989 - 91 |
| துறைமுகம் | : | 1991 |
| சேப்பாக்கம் | : | 1996 - 2001 |
| சேப்பாக்கம் | : | 2001 - 2006 |
| சேப்பாக்கம் | : | 2006லிருந்து |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் - மேலவையில் 50 ஆண்டுகளாகப் பணி வகிப்பவர். 1957-லிருந்து 2006 வரை போட்டியிட்ட சட்டமன்றத் தேர்தல்கள் அனைத்திலும் வெற்றி சித்திரம் படைத்தவர், படைத்துக் கொண்டு வருபவர்.



## கலைஞர் கண்ட களங்கள் !

1938 - பள்ளிப் பருவத்திலேயே மாணவர்களைத் திரட்டி இந்தி எதிர்ப்பு ஊர்வலம் நடத்தினார்.

1948 - ஆகஸ்ட் 15 இல்- தம் திருமண நிகழ்வு நாளில் கூட இந்தி எதிர்ப்பு ஊர்வலத்தில் பங்கேற்றுப் போராட்ட முழக்கமிட்டார்.

திருவையாறு அருகில் பள்ளியகரம் கறுப்புக்கொடி போராட்டம்.

1950 - திருச்சியில் இந்தி எழுத்து அழிப்புப் போராட்டம்.

1951 - ஜனவரி 7 - திராவிட நாடு கோரிக்கைக் கூட்டத்துக்கு 144 தடையைக் கண்டித்துக் கோவையில் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம்.

- இராஜாஜி அவர்களுக்கு அவர் செல்லுமிடம் எல்லாம் கருப்புக் கொடி போராட்டம்.

1953 - டால்மியா என்னும் வடநாட்டு முதலாளியின் பெயரை கல்லக்குடி என்னும் பழந்தமிழ் சிற்றூருக்கு வைத்ததைக் கண்டித்து ஜுலை 15 தலைவா் கலைஞர் தலைமையேற்ற கல்லக்குடி அறப்போர் 4 மாதச் சிறைத் தண்டனை. (15.07.53 முதல் 21.11.53 வரை).

1957 - நங்கவரம் விவசாயிகள் போராட்டத்தில் பங்கேற்பு.

1958 - தமிழர்தம் உரிமைப் போராட்டங்களை இழிவாகப் பேசிய பிரதமர் நேருவுக்குக் கறுப்புக் கொடி. விளக்கக் கூட்டம் தடை மீறல் (03.01.58 முதல் 08.01.58 வரை சிறைவாசம்).

திருச்சியில் பீடித் தொழிலாளர் போராட்டத்திற்குத் தலைமை ஏற்று வெற்றியீட்டித் தந்தார்.

1959 - ஜனவரி 6 - தஞ்சை எஸ்.எம்.டி பேருந்துத் தொழிலாளர் போராட்டத்தில் பங்கேற்பு.

1962 - விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் 3 மாதம் சிறை (19.07.62 முதல் 26.10.62 வரை)

1963 - இந்தியே இந்தியாவின் ஆட்சி மொழி எனக்கூறும் இந்திய அரசியல் சட்டப்பிரிவு எரிப்புப் போராட்டம் ஒரு வாரம் சிறை. (19.12.63 முதல் 25.12.63 வரை).

1965 - இந்தி எதிர்ப்புப் போராட்டம் - நள்ளிரவு 12 மணி அளவில் சென்னையில் கைது செய்யப்பட்டு பாளையங்கோட்டைக்கு காவல் துறை லாரியில் அழைத்துச் செல்லப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். (16.02.65 முதல் 04.04.65 வரை).

1976 - நெருக்கடி நிலை - பத்திரிகைத் தணிக்கையைக் கண்டித்து அண்ணா சாலையில் தனி மனிதராய் போராட்டம். 2.06.76 அன்று கைது செய்யப்பட்டு இரவே விடுதலை.

1977 - நாட்டில் நெருக்கடி நிலையை அறிவித்து - சர்வாதிகார முறையில் எதிர்கட்சித் தலைவர்களைச் சிறையில் அடைத்தது. முன்னாள் பிரதமர் இந்திரா காந்திக்குக் கருப்புக் கொடி - கைது (30-10-77 முதல் 08-12-77 வரை சிறைவாசம்.

1981 - மார்ச்-1 எம்.ஜி.ஆர். ஆட்சியின் எரிசாராய ஊழலை விசாரிக்கும் - 'கண் துடைப்புக்' கைலாசம் கமிசனை எதிர்த்து போராட்டம் அறிவிப்பு 35000 பேர் அரசு ஆணை எரிப்பு - 15000 பேர் கைது.

| | | |
|---|---|---|
| 1981 | | ஈழத் தமிழர் துயர் துடைக்கவும், அ.தி.மு.க. ஆட்சியின் அடக்கு முறையைக் கண்டித்தும் அறப்போர்க்களம் புக முனைந்தபோது கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார். (15.09.81 முதல் 29.09.81 வரை) |
| 1985 | - | ஈழத் தமிழர் ஆதரவுப் போர் - கைது. சிறைவாசம். (16.05.85 முதல் 30.05.85 வரை) சென்னை அரசினர் தோட்டத்தில் இயங்கி வந்த கட்சி அலுவலகத்தை அ.தி.மு.க. அரசு பறித்ததைக் கண்டித்து அறப்போரில் கைது ஆனார். (31.05.85 இரவே விடுதலை) |
| 1986 | - | இந்தித் திணிப்பை எதிர்த்து, இந்திய அரசியல் சட்டம் 17-வது பிரிவை எரித்துச் சிறை சென்றார். கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. அ.தி.முக. அரசினால் சிறையில் கலைஞருக்குச் சிறை உடையும், அலுமினியத் தட்டும் குவளையும் கொடுக்கப்பட்டன. (09.12.86 முதல் 30.01.87 வரை) |
| 1987 | - | வெள்ளக்கோவில் (19.04.87) கூட்டம் நடத்த 144 தடை உத்தரவு - தடையை மீறி பொதுக்கூட்டம். கூட்டம் முடிந்த பின் தலைவர் கைதாகி - பின் விடுதலை. |
| 1994 | - | 69% இட ஒதுக்கீட்டுப் போராட்டம் - கைது (20.06.94 அன்று இரவே விடுதலை). |
| 2001 | - | 30.06.2001 நள்ளிரவில் பொய் வழக்கில் கைது. 01.07.2001சென்னை மத்திய சிறைச்சாலையின் முன்பு தனிமையில் அமர்ந்து போராட்டம். |

**தலைவர் கலைஞர் இந்திய அளவிலே முதன் முதலாகப் பல அரிய சாதனைகளை நிகழ்த்திக் காட்டியுள்ளார். அவற்றில் சில.....**

**1969 முதல் - 2006 வரை**

❖ விடுதலை நாளில் கோட்டையில் தேசியக் கொடியை மாநில ஆளுநர் ஏற்றி வைக்கும் வழக்கத்தை மாற்றி மாநில முதல்வர்களுக்கு அவ்வுரிமையை பெற்றுத் தந்தார்

❖ குடிசை மாற்று வாரியம் அமைத்து குடிசைவாசிகளுக்காக அடுக்கு மாடி வீடுகள் அமைத்து அவர்களைத் குடியேற்றினார்.

❖ தாழ்த்தப்பட்டோருக்கும், மீனவர்களுக்கும் இலவச அடுக்குமாடி வீடுகளைக் கட்டித் தந்தார்.

❖ இந்தியாவிலேயே முதல் முதலாக போலீஸ் கமிஷன் அமைத்துக் காவல் துறையினரின் சீருடை, பணி, ஊதியம் ஆகியவற்றைச் சீர்திருத்தி அமைத்தார்.

❖ பணியாற்றும் பொழுது இறக்க நேரிடும் அரசு ஊழியரின் குடும்பத்தினருக்கு ரூ. 10,000 (தற்போது ஒரு இலட்சம்) உதவித் தொகை வழங்கும் முறையைத் தொடங்கி வைத்தார்.

❖ தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த வரதராசன் அவர்களை உயர்நீதிமன்ற நீதிபதியாக்கினார். பின்னர் அவர் உச்சநீதிமன்ற நீதியரசரும் ஆனார். உச்சநீதி மன்றத்தில் நீதியரசரான முதல் தாழ்த்தப்பட்டவர் அவரே.

❖ தனியார் பேருந்துகளை நாட்டுடைமை ஆக்கி சேர, சோழ, பாண்டியன், பல்லவன்-திருவள்ளுவர் ஆகியோர் பெயர்களால் போக்குவரத்துக் கழகங்களை உருவாக்கினார்.



❖ மாணவர்களுக்கு +2 வரை இலவசப் பேருந்துப் பயணச் சலுகை வழங்கினார் .

❖ பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பயிற்சி முகாம் தொடங்கினார்.

❖ மனிதனை வைத்து மனிதன் இழுக்கும் கை ரிக்சாவை ஒழித்து, அவர்களுக்கு இலவசமாக சைக்கிள் ரிக்சா வழங்கினார்.

❖ ஏழையர்க்குக் கண்ணொளி வழங்கும் திட்டம் செயல்படுத்தினார்.

❖ தொழுநோய் மற்றும் இரவலர்க்கு மறுவாழ்வு இல்லங்கள் அமைத்தார்.

❖ ஆதரவற்ற குழந்தைகளைக் காத்திடக் கருணை இல்லம் அமைத்தார்.

❖ தமிழ்நாட்டில் மே முதல் நாளைத் தொழிலாளர்களுக்குச் சம்பளத்துடன் கூடிய விடுமுறை என அறிவித்தார்.

❖ தமிழறிஞர்களின் பிள்ளைகளுக்கு பொறியியல், மருத்துவப் படிப்புகளில் 5% தனி இட ஒதுக்கீடு வழங்கினார்.

❖ கல்வித்துறையில் இளங்கலை, முதுகலைப் பட்டப் படிப்புத் தேர்வுகளை (Compound system) நடைமுறைப்படுத்தினார்.

❖ விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கினார்.

தலைவர் கலைஞர் இந்திய அளவிலே முதன் முதலாகப் பல அரிய சாதனைகளை நிகழ்த்திக் காட்டியுள்ளார்.
அவற்றில் சில....
[illegible] முதல் – [illegible] வரை

❖ விடுதலை நாளில் [illegible] தேசியக் கொடியை மாநில ஆளுநர் ஏற்றி வைக்கும் வழக்கத்தை மாற்றி மாநில முதல்வர்களுக்கு அவ்வுரிமையைப் பெற்றுத் தந்தார்

❖ குடிசை மாற்று வாரியம் அமைத்து குடிசைவாசிகளுக்காக அடுக்கு மாடி வீடுகள் கட்டித் தந்து அவர்களைக் குடியேற்றினார்.

❖ தாழ்த்தப்பட்டோர் [illegible] பிள்ளைகளுக்கும் இலவச [illegible] தந்தார்.

❖ இந்தியாவிலேயே முதன் முறையாக போலீஸ் கமிஷன் அமைத்து காவல் துறையினரின் சீருடை, பணி, ஊதியம் ஆகியவற்றைச் சீர்திருத்தி அமைத்தார்.

❖ பணியாற்றும் போது இறக்க நேரிடும் அரசு ஊழியரின் குடும்பத்தினருக்கு ரூ. 10,000 (தற்போது ஒரு இலட்சம்) உதவித் தொகை வழங்கும் முறையைத் தொடங்கி வைத்தார்.

❖ தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த வரதராசன் அவர்களை உயர்நீதிமன்ற நீதிபதியாக்கினார். பின்னர் அவர் உச்சநீதிமன்ற நீதியரசரும் ஆனார். உச்சநீதி மன்றத்தில் நீதியரசரான முதல் தாழ்த்தப்பட்டவர் அவரே.

❖ தனியார் பேருந்துகளை நாட்டுடைமை ஆக்கி சேர, சோழ, பாண்டியன், பல்லவன்-திருவள்ளுவர் ஆகியோர் பெயர்களால் போக்குவரத்துக் கழகங்களை உருவாக்கினார்.



❖ மாணவர்களுக்கு +2 வரை இலவசப் பேருந்துப் பயணச் சலுகை வழங்கினார் .

❖ பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பயிற்சி முகாம் தொடங்கினார்.

❖ மனிதனை வைத்து மனிதன் இழுக்கும் கை ரிக்ஷாவை ஒழித்து, அவர்களுக்கு இலவசமாக சைக்கிள் ரிக்ஷா வழங்கினார்.

❖ ஏழையர்க்குக் கண்ணொளி வழங்கும் திட்டம் செயல்படுத்தினார்.

❖ தொழுநோய் மற்றும் இரவலர்க்கு மறுவாழ்வு இல்லங்கள் அமைத்தார்.

❖ ஆதரவற்ற குழந்தைகளைக் காத்திடக் கருணை இல்லம் அமைத்தார்.

❖ தமிழ்நாட்டில் மே முதல் நாளைத் தொழிலாளர்களுக்குச் சம்பளத்துடன் கூடிய விடுமுறை என அறிவித்தார்.

❖ தமிழறிஞர்களின் பிள்ளைகளுக்கு பொறியியல், மருத்துவப் படிப்புகளில் 5% தனி இடஒதுக்கீடு வழங்கினார்.

❖ கல்வித்துறையில் இளங்கலை, முதுகலைப் பட்டப் படிப்புத் தேர்வுகளை (Compound system) நடைமுறைப்படுத்தினார்.

❖ விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கினார்.

❖ மத்திய அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்திற்கு இணையாக தமிழ்நாடு மாநில அரசு ஊழியர்களுக்கும் ஊதியம் வழங்கினார் .

❖ பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம் கொண்டு வந்தார் .

❖ மாநகராட்சி மேயருக்கு நேரடித் தேர்தல் முறையைக் கொண்டு வந்தார்.

❖ மாநில சுயாட்சி குறித்து ஆராய்ந்திட 'இராஜமன்னார் குழு' அமைத்தார்.

❖ மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகியோருக்காக 20% இட ஒதுக்கீடு அளித்தார்.

❖ கிழக்கு ஆசியாவிலேயே முதன்முதலாகக் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் ஏற்படுத்தினார்.

❖ தியாகி வ.உ. சிதம்பரனார் சிறையில் மெய்நோக இழுத்த செக்கினைத் தேடிக் கண்டுபிடிக்கச் செய்து அதை நினைவுச் சின்னமாக்கினார்.

❖ விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படுவது போல், மொழிப்போர் தியாகிகளுக்கும் ஓய்வூதியம் வழங்கினார்.

❖ விடுதலைப் போராட்ட வீரர் இறந்துவிட்டால், அவருக்கு அரசு மரியாதை செலுத்த வேண்டும் என ஆணையிட்டார்.

❖ ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் உட்பட்ட ஒரு சிற்றூரைத் தேர்ந்தெடுத்து, அதில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்தினார்.



❖ சாதி, சமயப் பூசல்களை மறந்து தமிழ் மக்கள் அனைவரும் ஒற்றுமையாய் வாழ்ந்திட நாடெங்கும் சமத்துவபுரம் திறந்து அவற்றிற்குப் பெரியார் நினைவு சமத்துவபுரம் எனப் பெயரிட்டார்.

❖ நாட்டு மக்களிடையே கூட்டுறவு, தற்சார்பு உணர்வுகளை வளர்த்திட நமக்கு நாமே திட்டம் கொண்டு வந்தார்.

❖ தமிழ்நாடு சட்டமன்றத்தில் மாநில சுயாட்சித் தீர்மானம் நிறைவேற்றி அதனைத் தில்லிக்கு அனுப்பினார்.

❖ பிற்படுத்தப்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் நலன்களுக்குத் தனித்துறை ( அமைச்சகம்) ஏற்படுத்தினார்.

❖ சமூக சீர்திருத்தத்திற்காக தனி அமைச்சகம் ஏற்படுத்தினார்.

❖ இடைத்தரகர்களின் தலையீடு இன்றி உற்பத்தியாளரும், நுகர்வோரும் நேரடித் தொடர்பு கொள்ளும் வகையில் உழவர் சந்தைகள் தொடங்கினார்.

❖ கிராமப்புற ஏழை எளிய மாணவர்களுக்கு, பொறியியல் மற்றும் மருத்துவப் படிப்புகளில் 5% தனி இட ஒதுக்கீடு வழங்கினார்.

❖ பட்டதாரிகள் இல்லாத குடும்பங்களிலிருந்து வரும் 100 மாணவ, மாணவியர்களுக்கு இலவச தொழிற் கல்வி வழங்கினார்.

❖ மெட்ராஸ் என்ற பெயரை சென்னை என மாற்றினார்.

❖ சாதி, சமயப் பூசல்களை மறந்து தமிழ் மக்கள் அனைவரும் ஒற்றுமையாய் வாழ்ந்திட நாடெங்கும் சமத்துவபுரம் திறந்து அவற்றிற்குப் பெரியார் நினைவு சமத்துவபுரம் எனப் பெயரிட்டார்.

❖ நாட்டு மக்களிடையே கூட்டுறவு, தற்சார்பு உணர்வுகளை வளர்த்திட நமக்கு நாமே திட்டம் கொண்டு வந்தார்.

❖ தமிழ்நாடு சட்டமன்றத்தில் மாநில சுயாட்சித் தீர்மானம் நிறைவேற்றி அதனைத் தில்லிக்கு அனுப்பினார்.

❖ பிற்படுத்தப்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் நலங்காக்கத் தனித்துறை ( அமைச்சகம்) ஏற்படுத்தினார்.

❖ சமூக சீர்திருத்தத்திற்காக தனி அமைச்சகம் ஏற்படுத்தினார்.

❖ இடைத்தரகர்களின் தலையீடு இன்றி உற்பத்தியாளரும், நுகர்வோரும் நேரடித் தொடர்பு கொள்ளும் வகையில் உழவர் சந்தைகள் தொடங்கினார்.

❖ கிராமப்புற ஏழை எளிய மாணவர்களுக்கு, பொறியியல் மற்றும் மருத்துவப் படிப்புகளில் 5% தனி இட ஒதுக்கீடு வழங்கினார்.

❖ பட்டதாரிகள் இல்லாத குடும்பங்களிலிருந்து வரும் 100 மாணவ, மாணவியர்களுக்கு இலவச தொழிற் கல்வி வழங்கினார்.

❖ மெட்ராஸ் என்ற பெயரை சென்னை என மாற்றினார்.

❖ உள்ளாட்சி அமைப்புகளில் 33 விழுக்காடு மகளிருக்கு இடஒதுக்கீடு

❖ அரசு அலுவலர்கள், அரசின் நிறுவனங்கள், ஊராட்சி மன்றங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவற்றில், பெண்களுக்கு 30% இட ஒதுக்கீடு செய்தார்.

❖ நகரங்களை குக்கிராமங்களுடன் இணைத்திட சிற்றுந்து (மினிபஸ்) திட்டம் கொண்டு வந்தார்.

❖ தில்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக்குழுக் கூட்டத்தில் (1969) **'வங்கிகளை நாட்டுடைமை'** ஆக்கிட யோசனை கூறினார். (இதன் அடிப்படையில்தான் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் 14 தனியார் வங்கிகளை நாட்டுடைமை ஆக்கினார்.

❖ பன்னாட்டு மூலதனத்தை தமிழ்நாட்டுக்குக் கவர்ந்திட இந்தியாவிலேயே முதன்முதலாக **டைடல் பூங்கா** என்னும் கணினி மென்பொருள் பூங்காவினை அமைத்தார்.

❖ அரசு ஊழியர்களைப் பழிவாங்குவதற்கே பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டு வந்த இரகசியக் குறிப்பேடு முறையை ஒழித்தார்.

❖ தமிழ்நாட்டின் சமூக-பொருளாதார மேம்பாட்டிற்காக மாநில திட்டக்குழுவை அமைத்தார்.

❖ எட்டாம் வகுப்பு வரை படித்த ஏழை இளம் பெண்களுக்கு அரசின் சார்பில் ரூ.5,000/- (அதன்பின் ரூ.10,000/- இப்பொழுது ரூ.15,000/- திருமண நிதி உதவித் திட்டம் வகுத்தார்.)



❖ ஏழை எளியோருக்கான பல்முனை மருத்துவப் பரிசோதனைத் திட்டமான வருமுன் காப்போம் திட்டத்தை அறிவித்தார்.

❖ சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தொகுதி அலுவலகம் கட்ட ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு செய்தார்.

❖ தமிழகத்தை இந்தியாவின் டெட்ராய்ட் ஆக மாற்றிய கார் உற்பத்தி தொழிற்கூடங்கள் தொடங்க அனுமதித்தார்.

❖ உலகத் தமிழ் இணையம் பல்கலைக்கழகத்தை உருவாக்கினார்.

❖ தமிழ்விசைப் பலகையை தரப்படுத்துவதற்காக தமிழ் இணைய மாநாட்டை சிறப்பாக நடத்தினார்.

❖ சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தொகுதி மேம்பாடு நிதி ஒதுக்கீடு செய்தார்.

❖ தமிழர்களின் 150 ஆண்டு கனவான சேது சமுத்திரத் திட்டம் நடைமுறைக்கு வரச் செய்தார்.

❖ தமிழைச் செம்மொழியாக அறிவிக்கச் செய்தார்.

❖ தேசிய சித்த மருத்துவ ஆய்வு மையத்தை சென்னைக்கு கொண்டு வந்தார்.

❖ கடல் சார் பல்கலைக்கழகம் அமைக்கச் செய்தார்.

❖ பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் முதலமைச்சர் பதவியேற்ற தலைவர் கலைஞர் அவர்கள் அதே மேடையில் தமது தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளித்திருந்த 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, கூட்டுறவு வங்கிகளில் விவசாயக் கடன் அறவே ரத்து, சத்துணவில் வாரம் இரு முறை முட்டைகள் வழங்கல் போன்ற திட்டங்களை நிறைவேற்றுவதாக அறிவித்து, அதற்கான கோப்புகளில் மக்கள் முன்னிலையில் கையெழுத்திட்டார்.

❖ ஏழை எளியோருக்கான பன்முனை மருத்துவப் பரிசோதனைத் திட்டமான வருமுன் காப்போம் திட்டத்தை அறிவித்தார்.

❖ சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தொகுதி அலுவலகம் கட்ட ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு செய்தார்.

❖ தமிழகத்தை இந்தியாவின் டெட்ராய்ட் ஆக மாற்றிய கார் உற்பத்தி தொழிற்கூடங்கள் தொடங்க அனுமதித்தார்.

❖ உலகத் தமிழ் இணையம் பல்கலைக்கழகத்தை உருவாக்கினார்.

❖ தமிழ்விசைப் பலகையை தரப்படுத்துவதற்காக தமிழ் இணைய மாநாட்டை சிறப்பாக நடத்தினார்.

❖ சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தொகுதி மேம்பாடு நிதி ஒதுக்கீடு செய்தார்.

❖ தமிழர்களின் 150 ஆண்டு கனவான சேது சமுத்திரத் திட்டம் நடைமுறைக்கு வரச் செய்தார்.

❖ தமிழைச் செம்மொழியாக அறிவிக்கச் செய்தார்.

❖ தேசிய சித்த மருத்துவ ஆய்வு மையத்தை சென்னைக்கு கொண்டு வந்தார்.

❖ கடல் சார் பல்கலைக்கழகம் அமைக்கச் செய்தார்.

❖ பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் முதலமைச்சர் பதவியேற்ற தலைவர் கலைஞர் அவர்கள் அதே மேடையில் தமது தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளித்திருந்த 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, கூட்டுறவு வங்கிகளில் விவசாயக் கடன் அறவே ரத்து, சத்துணவில் வாரம் இரு முறை முட்டைகள் வழங்கல் போன்ற திட்டங்களை நிறைவேற்றுவதாக அறிவித்து, அதற்கான கோப்புகளில் மக்கள் முன்னிலையில் கையெழுத்திட்டார்.

- ❖ தந்தை பெரியார் நெஞ்சில் உள்ள முள்ளை அகற்றும் அரும்பணியாக தகுதியுள்ள அனைத்து சாதியினரும் திருக்கோயில்களில் அர்ச்சகராக உத்தரவு பிறபித்தார்.
- ❖ எல்லாப் பள்ளிகளிலும் தமிழ் கட்டாயப் பாடமாக்கப்பட்டது.
- ❖ கண்ணகி சிலை திறப்பு
- ❖ இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கல்
- ❖ நிலமற்ற விவசாயிகளுக்கு இரண்டு ஏக்கர் நிலம்
- ❖ பனைத் தொழிலாளர் நலனுக்குத் தனி வாரியம்
- ❖ தொகுப்பூதிய ஆசிரியர்களுக்கு காலமுறை ஊதியம்
- ❖ நுழைவுத் தேர்வு ரத்துக்கு நிபுணர் குழு அமைப்பு
- ❖ மருத்துவம், பொறியியல் கல்விக் கட்டணம் குறைப்பு
- ❖ மதமாற்றத் தடைச் சட்டம் திரும்பப் பெறுதல்
- ❖ பின்தங்கிய பகுதிகளில் தொழில் தொடங்க மானியம்
- ❖ சென்னையில் மெட்ரோ ரயில் திட்டம்
- ❖ அனைத்து நகராட்சிகளிலும் பாதாள சாக்கடை திட்டம்
- ❖ சென்னையில் கடல்நீரை குடிநீராக்கும் திட்டம்
- ❖ அரசு ஊழியர்களுக்கு எதிரான டெஸ்மா சட்டம் ரத்து
- ❖ அரசுப் பணியில் சேர வயது வரம்பு நீட்டிப்பு
- ❖ இளைஞர் சுய உதவி குழு அமைத்தல்
- ❖ சட்டமன்ற மேலவை மீண்டும் கொண்டுவருதல்.
- ❖ கிராமங்களில் அமைதி ஏற்பட கோவில்களில் வழிபடும் இடங்களில் ஏற்றத்தாழ்வு அகன்றிட முக்கியப் பிரமுகர்களுக்கு, பரிவட்டம் கட்டும் நிகழ்ச்சி தடை செய்யப்பட்டது.
- ❖ தலைவர் கலைஞர் அவர்களின் தன்னிகரில்லாப் பணிகள் இன்னும் பலப்பல.. பலப்பல..தொடரும்... தொடரும்....



## தலைவர் கலைஞர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள்

- ஜூன் 3 – திருவாரூரை அடுத்த திருக்குவளையில் முத்துவேலர் – அஞ்சுகம் இணையருக்குப் பிறந்தார்.
- திருக்குவளை தொடக்கப்பள்ளியில் முதல் வகுப்பில் சேர்ந்தார். அதே பள்ளியில் ஐந்தாம் வகுப்புவரை படித்து, அந்தந்த வகுப்புகளின் 'சட்டாம் பிள்ளை'யாக விளங்கினார்.

### முதல் போராட்டம்

1936 திருவாரூர் உயர்நிலைப் பள்ளியில் 6–ஆம் வகுப்பில் சேர்த்துக்கொள்ள இயலாது என்று தலைமை ஆசிரியர் கஸ்தூரி ஐயங்கார் மறுத்தார். இடம் தரவில்லையெனில் எதிரேயுள்ள தெப்பக் குளத்தில் குதித்து உயிரை விட்டுவிடுவேன் என்று கூறியது மட்டுமின்றி, அவ்வாறு குதிக்கவும் முனைந்தார். படிப்பில் அவருக்கு இருந்த ஆர்வம் கண்டு 5–ஆம் வகுப்பில் சேர்ந்து படிக்க இசைவு அளிக்கப்பட்டது. முதல் போராட்டத்தின் வெற்றி இது.

பொது வாழ்வில் எடுத்து வைத்த முதல் அடி

1938 இந்தி எதிர்ப்புப் போர் தமிழகத்தில் தொடங்கிய நேரம். நாள்தோறும் மாணவர்களைக் கூட்டி, கையில் கொடியுடன் இந்தி எதிர்ப்பு முழக்கங்களை எழுப்பிக் கட்டாய இந்தியை எதிர்த்து மாணவர் பேரணி நடத்தினார். இதுவே கலைஞர் பொதுவாழ்வில் எடுத்து வைத்த முதல் அடி எனலாம்.

- தந்தை பெரியார் நெஞ்சில் உள்ள முள்ளை அகற்றும் அரும்பணியாக தகுதியுள்ள அனைத்து சாதியினரும் திருக்கோவில்களில் அர்ச்சகராக உத்தரவு பிறப்பித்தார்.
- எல்லாப் பள்ளிகளிலும் தமிழ் கட்டாயப் பாடமாக்கப்பட்டது.
- கண்ணகி சிலை திறப்பு
- இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கல்
- நிலமற்ற விவசாயிகளுக்கு இரண்டு ஏக்கர் நிலம்
- பனைத் தொழிலாளர் நலனுக்குத் தனி வாரியம்
- தொகுப்பூதிய ஊழியர்களுக்கு காலமுறை ஊதியம்
- நுழைவுத் தேர்வு நீக்கத்திற்கு நீதிபதி குழு அமைப்பு
- மருத்துவம், பொறியியல் கல்விக் கட்டணம் குறைப்பு
- மதமாற்றத் தடைச் சட்டம் திரும்பப் பெறுதல்
- [illegible] தொழில் தொடங்க மானியம்
- சென்னையில் மெட்ரோ ரயில் திட்டம்
- அனைத்து நகரங்களிலும் பாதாள சாக்கடை திட்டம்
- சென்னையில் கடல்நீரை குடிநீராக்கும் திட்டம்
- அரசு ஊழியர்களுக்கு எதிரான டெஸ்மா சட்டம் ரத்து
- அரசுப் பணியில் சேர வயது வரம்பு நீட்டிப்பு
- இளைஞர் சுய உதவிக் குழு அமைத்தல்
- சட்டமன்ற மேலவை மீண்டும் கொண்டுவருதல்.
- கிராமங்களில் அமைதி ஏற்பட கோவில்களில் வழிபடும் இடங்களில் ஏற்றத்தாழ்வு அகன்றிட முக்கிய பிரமுகர்களுக்கு, பரிவட்டம் கட்டும் நிகழ்ச்சி தடை செய்யப்பட்டது.
- தலைவர் கலைஞர் அவர்களின் தன்னிகரில்லாப் பணிகள் இன்னும் பலப்பல.. பலப்பல.. தொடரும்... தொடரும்...



## தலைவர் கலைஞர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள்

- ஜூன் 3 – திருவாரூரை அடுத்த திருக்குவளையில் முத்துவேலர் – அஞ்சுகம் இணையருக்குப் பிறந்தார்.
- திருக்குவளை தொடக்கப்பள்ளியில் முதல் வகுப்பில் சேர்ந்தார். அதே பள்ளியில் ஐந்தாம் வகுப்புவரை படித்து, அந்தந்த வகுப்புகளின் ‘சட்டாம் பிள்ளை’யாக விளங்கினார்.

### முதல் போராட்டம்

1936 திருவாரூர் உயர்நிலைப் பள்ளியில் 6–ஆம் வகுப்பில் சேர்த்துக்கொள்ள இயலாது என்று தலைமை ஆசிரியர் கஸ்தூரி ஐயங்கார் மறுத்தார். இடம் தரவில்லையெனில் எதிரேயுள்ள தெப்பக் குளத்தில் குதித்து உயிரை விட்டுவிடுவேன் என்று கூறியது மட்டுமின்றி, அவ்வாறு குதிக்கவும் முனைந்தார். படிப்பில் அவருக்கு இருந்த ஆர்வம் கண்டு 5–ஆம் வகுப்பில் சேர்ந்து படிக்க இசைவு அளிக்கப்பட்டது. முதல் போராட்டத்தின் வெற்றி இது.

### பொது வாழ்வில் எடுத்து வைத்த முதல் அடி

1938 இந்தி எதிர்ப்புப் போர் தமிழகத்தில் தொடங்கிய நேரம். நாள்தோறும் மாணவர்களைக் கூட்டி, கையில் கொடியுடன் இந்தி எதிர்ப்பு முழக்கங்களை எழுப்பிக் கட்டாய இந்தியை எதிர்த்து மாணவர் பேரணி நடத்தினார். இதுவே கலைஞர் பொதுவாழ்வில் எடுத்து வைத்த முதல் அடி எனலாம்.

## முதல் சொற்பொழிவு

1939 பள்ளியில் நடைபெற்ற சொற்போட்டியில் ‘‘நட்பு’’ என்ற தலைப்பில் பேசினார். அப்போது எட்டாம் வகுப்பு மாணவர். அதுவே அவர் ஆற்றிய முதல் சொற்பொழிவு. அதே சமயம் தான் சிறுவர் சீர்திருத்தச் சங்கம் அமைத்து வாரம்தோறும் பேச்சுப் பயிற்சி அளித்தார். அப்போதே மாணவர்களிடையே வார சந்தா வசூலித்து அமைப்பு ரீதியாகச் செயல்பட்டார்.

## முதல் அமைப்பு

1940 மாணவர் ஒற்றுமைக்கென ‘‘தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம்’’ என்கிற தனி அமைப்பு ஏற்படுத்தி வாரம்தோறும் கூட்டம் நடத்தினார்.

1941 தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றத்தின் கிளைகள் தஞ்சை மாவட்டத்திலும், தமிழ் நாட்டில் பல இடங்களிலும் ஏற்படுத்த அயராது பாடுபட்டார்.

## முதல் பத்திரிகை

1941 மாணவர்களிடையே எழுத்தாற்றலைச் சிறப்பாக வளர்க்க ‘‘மாணவநேசன்’’ என்ற மாத இதழைக் கையெழுத்து ஏடாகத் தொடங்கி நடத்தினார்.



## முதல் விழா

1942 தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றத்தின் ஆண்டு விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடி (பேராசிரியர்) க.அன்பழகன், கே.ஏ.மதியழகன் ஆகிய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் அன்றைய மாணவர்களை அழைத்துப் பேச செய்தார். அந்த ஆண்டு விழாவின் போது புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் அனுப்பிய வாழ்த்துப்பா பிற்காலத்தில் உணர்ச்சிக் கவிதையாக வரலாற்றுப் புகழ் பெற்று அமைந்தது. இந்நிகழ்ச்சியின் போது நிதிப் பற்றாக்குறைக்காக தமது கைச்சங்கிலியை அடகுவைத்துச் சமாளித்தார்.

## முதல் கட்டுரை

1942 பேரறிஞர் அண்ணா நடத்திய ‘‘திராவிட நாடு’’ மூன்றாவது இதழில் ‘‘ இளமைப் பலி’’ என்ற இவரது எழுத்தோவியம் வெளிவந்தது. திருவாரூரில் நடைபெற்ற நடிகர் நாடகம் விழாவுக்கு வருகைதந்த அறிஞர் அண்ணா அவர்கள் ‘‘இளமைப்பலி’’ கட்டுரை எழுதிய இளைஞர் மு.கருணாநிதியை சந்திக்க விரும்பி, அவரை அழைத்து வரச் செய்து நேரில் சந்தித்து கலைஞரின் எழுத்தாற்றலைப் பாராட்டினார். அத்துடன் படிப்பில் தொடர்ந்து ஆர்வம் காட்டச் சொன்னார். அண்ணாவின் அறிவுரைகளில் கலைஞர் செயல்படுத்தாமல் விட்டது இது ஒன்றுதான்.

## முதல் விழா

1942 தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றத்தின் ஆண்டு விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடி (பேராசிரியர்) க.அன்பழகன், கே.ஏ.மதியழகன் ஆகிய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் அன்றைய மாணவர்களை அழைத்துப் பேசச் செய்தார். அந்த ஆண்டு விழாவின் போது புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் அனுப்பிய வாழ்த்துப்பா பிற்காலத்தில் உணர்ச்சிக் கவிதையாக வரலாற்றுப் புகழ் பெற்று அமைந்தது. இந்நிகழ்ச்சியின் போது நிதிப் பற்றாக்குறைக்காக தமது கைச்சங்கிலியை அடகுவைத்துச் சமாளித்தார்.

## முதல் கட்டுரை

1942 பேரறிஞர் அண்ணா நடத்திய ''திராவிட நாடு'' மூன்றாவது இதழில் '' இளமைப் பலி'' என்ற இவரது எழுத்தோவியம் வெளிவந்தது. திருவாரூரில் நடைபெற்ற நபிகள் நாயகம் விழாவுக்கு வருகைதந்த அறிஞர் அண்ணா அவர்கள் ''இளமைப்பலி'' கட்டுரை எழுதிய இளைஞர் மு.கருணாநிதியை சந்திக்க விரும்பி, அவரை அழைத்து வரச் செய்து நேரில் சந்தித்து கலைஞரின் எழுத்தாற்றலைப் பாராட்டினார். அத்துடன் படிப்பில் தொடர்ந்து ஆர்வம் காட்டச் சொன்னார். அண்ணாவின் அறிவுரைகளில் கலைஞர் செயல்படுத்தாமல் விட்டது இது ஒன்றுதான்.

இதே ஆண்டில் தான்''முரசொலி வெளியீட்டுக் கழகம்'' என்ற பெயரில் ஒரு நிறுவனம் தொடங்கி ''முரசொலியை'' மாத இதழாக 10.08.1942ல் வெளியிட்டார். அதில் ''சேரன்'' என்ற புனைப் பெயரில் கனல் தெறிக்கும் கட்டுரைகளை எழுதினார்.

### முதல் நாடகம்

1944 28.5.44 திருவாரூர் கருணாநிதி திரையரங்கில் (பேபி டாக்கீஸ்) முதன் முதலாகப் 'பழனியப்பன்' என்ற சீர்திருத்த நாடகத்தை அரங்கேற்றினார்.

திருவாரூர் சுயமரியாதைச் சங்க ஆண்டு விழாவில் கலந்து கொள்ள வந்த பெரியார் அவர்கள் கலைஞரின் முரசொலி ஏடு கண்டு மகிழ்ந்து மிகச்சிறந்த பணி என்று பாராட்டினார். அன்று முதல் பெரியாருடன் கூட்டங்களில் கலந்து கொண்டு ஆவேசமாகப் பேசத் தொடங்கினார்.

திராவிட நடிகர் கழகத்தை ஆரம்பித்து விழுப்புரத்தில் 'பழனியப்பன்' நாடகத்தை நடத்தியதோடு அதில் முக்கியப் பாத்திரமேற்று நடித்தார்.

### திருமணம்

11.11.44 அன்று பத்மாவதி அம்மையாரை வழக்கறிஞர் விசயராகவலு தலைமையில் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டார்.



### கலைஞர் மீது நடந்த முதல் தாக்குதல்

புதுவையில் திராவிடர் கழக மாநாட்டுக்குச் சென்று திரும்பியபோது காங்கிரசார் கலைஞரைக் கடுமையாகத் தாக்கினார்கள். மயங்கி விழுந்து விட்டவரை இறந்துவிட்டார் எனக் கருதி சாக்கடையில் வீசி எறிந்துவிட்டுச் சென்றுவிட்டனர். கருணை உள்ளம் கொண்ட தாய் ஒருவரும், இளைஞர் ஒருவரும் அவரைக் காத்தனர்.

மறுநாள் முகமதியர் போன்று மாறு வேடமணிந்து பெரியாரைச் சந்தித்தார். பெரியார் கலைஞரைக் கட்டித்தழுவிக் காயங்களுக்கு மருந்திட்டார். தன்னுடன் அழைத்துச் சென்று ''குடிஅரசு'' வார இதழின் துணை ஆசிரியராக்கினார்.

### முதல் கொடி அமைப்பு

1946 திராவிடர் கழகக் கொடிக்கு மாதிரி அமைத்து நடுவில் உள்ள சிவப்பு நிறத்தைக் குறிக்க, தன் கைவிரலை அறுத்து இரத்தத்தை பதித்தார். முதன் முதலாக தன் குருதியை கொடிக்குக் காணிக்கையாக்கினார்.

- கோவை ஜூபிடர் நிறுவனத்திற்கு கலைப் பணிபுரிய பெரியாரிடம் விடைபெற்றுச் சென்றார்.

### தந்தை மறைவின் போது

1948 தம் தந்தையார் மரணப் படுக்கையில் இருந்தபோது மருத்துவரை அழைக்க கலைஞர் சென்றார். அப்போது அந்த மருத்துவர், சித்த வைத்தியர்கள் மாநாட்டிணை

### கலைஞர் மீது நடந்த முதல் தாக்குதல்

புதுவையில் திராவிடர் கழக மாநாட்டுக்குச் சென்று திரும்பியபோது காங்கிரசார் கலைஞரைக் கடுமையாகத் தாக்கினார்கள். மயங்கி விழுந்து விட்டவரை இறந்துவிட்டார் எனக் கருதி சாக்கடையில் வீசி எறிந்துவிட்டுச் சென்றுவிட்டனர். கருணை உள்ளம் கொண்ட தாய் ஒருவரும், இளைஞர் ஒருவரும் அவரைக் காத்தனர்.

மறுநாள் முகமதியர் போன்று மாறு வேடமணிந்து பெரியாரைச் சந்தித்தார். பெரியார் கலைஞரைக் கட்டித்தழுவிக் காயங்களுக்கு மருந்திட்டார். தன்னுடன் அழைத்துச் சென்று ''குடிஅரசு'' வார இதழின் துணை ஆசிரியராக்கினார்.

### முதல் கொடி அமைப்பு

1946 திராவிடர் கழகக் கொடிக்கு மாதிரி அமைத்து நடுவில் உள்ள சிவப்பு நிறத்தைக் குறிக்க, தன் கைவிரலை அறுத்து இரத்தத்தை பதித்தார். முதன் முதலாக தன் குருதியை கொடிக்குக் காணிக்கையாக்கினார்..

- கோவை ஜூபிடர் நிறுவனத்திற்கு கலைப் பணிபுரிய பெரியாரிடம் விடைபெற்றுச் சென்றார்.

### தந்தை மறைவின் போது

1946 தம் தந்தையார் மரணப் படுக்கையில் இருந்தபோது மருத்துவரை அழைக்க கலைஞர் சென்றார். அப்போது அந்த மருத்துவர், சித்த வைத்தியர்கள் மாநாட்டினை

தலைமையேற்று நடத்திக் கொண்டு இருந்தார். அங்கு வந்த கலைஞரை கண்டதும் மாநாட்டில் உடனே அவரை உரையாற்றிட அறிவித்துவிட்டார். கலைஞர் உறையாற்றிக்கொண்டிருந்தபோது நண்பர் தென்னன், தந்தையாரின் மரணச் செய்தியோடு வந்தார்.

1947 முரசொலி வார இதழை வெளியிட்டார்.

- இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்ததைப் பெரியார் 'தமிழர்களுக்குத் துக்க நாள்' – என்றார். அண்ணா ''அது திராவிடர்களுக்குத் திருநாள்'' என்று குறிப்பிட்டார். இதனால் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டைக் களைய, பெரியாருக்கும், அண்ணாவுக்கும் பாலம் அமைக்க முரசொலியில் 'கடைசி நாட்கள்' என்ற கட்டுரையைக் கலைஞர் வடித்தார்.

**துணைவியாரின் மறைவின் போதும்...**

1948 துணைவியார் பத்மாவதி அவர்கள் நோயுற்று மரணப்படுக்கையில் இருந்த நேரத்திலும் இயக்கத் தோழர்களின் வேண்டுகோளை மறுக்க முடியாமல் கலைஞர் புதுக்கோட்டைக் கூட்டத்திற்கு உரையாற்றச் சென்றிருந்தார். கூட்டம் முடிந்து லாரியில் ஊர் திரும்புவதற்குள் கலைஞரின் துணைவியார் இயற்கை எய்திவிட்டார்.



**திருமண நாளிலும்...**

1948 தயாளு அம்மையாரைத் திருமணம் செய்து கொண்டார். அதே நாளில் திருமணத்திற்கு சற்று முன்பு, மணமகன் கோலத்தில் இருந்தபோதும், அவ்வழியே சென்ற இந்தி எதிர்ப்பு ஊர்வலத்தில் கலந்து கொண்டார்.

1949 சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனத்தில் கலைப் பணி. அங்கே கலைவாணரின் சந்திப்பும் அவருடன் நெருங்கிய நட்பும் வளர்ந்தது.

- 17.09.1949 - திராவிட முன்னேற்றக் கழகம் பேரறிஞர் அண்ணா அவர்களால் தொடங்கப்பட்டது. கலைஞர் அதன் தோற்றுனர்களுள் ஒருவரானார்.
- 18.09.1949 - சென்னை பவளக்காரத் தெருவில் நடந்த தி.மு.க. அமைப்புக் கூட்டத்தில் பொதுக்குழு, பிரச்சாரக் குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- தஞ்சை மாவட்டத்தில் பிரச்சாரச் சுற்றுப் பயணம். இராஜாஜி அவர்களுக்குக் கறுப்புக் கொடி காட்டினார். மாலைமணி இதழின் ஆசிரியரானார்.

## திருமண நாளிலும்...

1948 தயாளு அம்மையாரைத் திருமணம் செய்து கொண்டார். அதே நாளில் திருமணத்திற்கு சற்று முன்பு, மணமகன் கோலத்தில் இருந்தபோதும், அவ்வழியே சென்ற இந்தி எதிர்ப்பு ஊர்வலத்தில் கலந்து கொண்டார்.

1949 சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனத்தில் கலைப் பணி. அங்கே கலைவாணரின் சந்திப்பும் அவருடன் நெருங்கிய நட்பும் வளர்ந்தது.

- 17.09.1949 - திராவிட முன்னேற்றக் கழகம் பேரறிஞர் அண்ணா அவர்களால் தொடங்கப்பட்டது. கலைஞர் அதன் தோற்றுனர்களுள் ஒருவரானார்.

- 18.09.1949 - சென்னை பவளக்காரத் தெருவில் நடந்த தி.மு.க. அமைப்புக் கூட்டத்தில் பொதுக்குழு, பிரச்சாரக் குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

- தஞ்சை மாவட்டத்தில் பிரச்சாரச் சுற்றுப் பயணம். இராஜாஜி அவர்களுக்குக் கறுப்புக் கொடி காட்டினார். மாலைமணி இதழின் ஆசிரியரானார்.

### மாநாட்டின் - முதல் தலைமை

- 1950 ஆகஸ்ட் 26, 27 நெல்லை மாவட்ட மாநாடு தலைமைப் பொறுப்பினைக் கலைஞர் ஏற்றார்.
- 17.11.1951 - மதுரையில் பொதுக்குழுக் கூட்டம் மாநில மாநாட்டு வரவேற்புக் குழுவில், விளம்பரம் -கலை நிகழ்ச்சி செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### முதல் மாநில மாநாடு

1951 டிசம்பர் : 13, 14, 15, 16, சென்னை எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் தி.மு.கழக முதல் மாநில மாநாடு. இரண்டாம் நாள் சொற்பொழிவாற்றினார். 3-ஆம் நாள் 'வாழ முடியாதவர்கள்' நாடகத்தை நடத்தினார்.

